(b) the methods adopted for such enforcement ; and

(c) the number of cases charged and which ended in conviction during 1972 for contravention of the provisions of the Act ?

தமிழ்நாடு சீட்டு நிதிகள் சட்டம், 1961

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு சீட்டு நிதிகள் சட்டம் (சட்டம் எண். 24/1961) கண்டிப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றதா ?

(இ) அவ்வாறு செயல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் முறைகள் யாவை ?

(உ) இச்சட்டத்தின் விதித்துறைகளை மீறியதற்காக, 1972-ஆம் ஆண்டில் குற்றஞ்சாட்டப்பட்டு, தண்டனையில் முடிந்த வழக்குகள் எத்தனை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு தலைவாவர்களே, ஆம்.

1972-ஆம் ஆண்டில் பல்வேறு வகைப்பட்ட குற்றங்களுக்காக 427 நேர்வுகளில் வழக்குகள் தொடரப்பட்டன. அவற்றில் 111 நேர்வுகள் அனுமதி பெறாத சீட்டுகள் தொடர்பானவை. 289 நேர்வுகளில் தண்டனை அளிக்கப்பட்டது. மீதமுள்ள வழக்குகள் நீதிமன்றங்களில் விசாரணையில் உள்ளன.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள் 13 முதல் 15 வரை ஒத்திப் போடப்படுகின்றன. வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

(1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழு நேற்று நடந்த கூட்டத்தில், அவையின் அலுவல் குறித்து, கீழ்க்கண்டவாறு முடிவு செய்துள்ளது :—

19—1—1974	ஆளுநர் உரையின் மீது விவாதம்.
20—1—1974	விடுமுறை.

21—1—1974 முதல் 25—1—1974 வரை ஆளுநர் உரையின்மீது விவாதம்.

26—1—1974 குடியரசு நாள்—விடுமுறை.

27—1—1974 விடுமுறை.

28—1—1974 ஆளுநர் உரையின் மீதான விவாதத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை.

29—1—1974 அரசின் சட்ட முன்வடிவுகளும், தீர்மானங்களும்.

மேலவை வழக்கம்போல் பிற்பகல் 4 மணி முதல் 7 மணி வரை நடைபெறும்.

(2) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள், 1974 ஜனவரி 21-ஆம் நாள், திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு முன்னதாக செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டும் என நான் மேலவை உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

3. மாற்றுத் தலைவர் பட்டியல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 6வது விதியின் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை, மேலவையின் 47-வது கூட்டத் தொடருக்கு மாற்றுத் தலைவர்களாக நான் நியமித்துள்ளேன் :—

1. திரு. எம். இராமநாதன்.
2. திரு. எல். பலராமன்.
3. திரு. கே. எஸ். கணபதி.
4. திரு. எம். எம். பக்கர்.

4. ஆளுநர் உரையின் மீது விவாதம்.

திரு. எம். சங்கரலிங்கம் : மேலவைத் தலைவரவர்களே, " 1974 ஆம் ஆண்டு சனவரி 17 ஆம் நாள், ஆளுநர் அவர்கள் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு உரை @ நிகழ்த்தியதற்காக தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றனர் " என்று முன் மொழிகிறேன்.

@ 95-104 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.